1981 இல் அரச திணைக்களங்கள், அரசுசார் நிறுவனங்கள் (அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள்) நன்கமைந்த தனியார்துறை (ஊழியர் சேமநிதியத்திற்கு உதவு தொகை செலுத்தும் தனியார் நிறுவனங்கள்) ஆகியவற்றில் தொழில்நிலை 40,622 ஆல் அதிகரித்துள்ளது. 1979, 1980 இன் தொடர்பான இவ்வெண்ணிக்கை முறையே 115,000, ஆகவும் 18,035 ஆகவும் இருந்தன. புதிய தொழில்நிலைக்கான மதிப்பீடுகள் பொருளாதாரத்தின் நன்கமையாத துறைகளில் முக்கியமாக மரபுவழி வேளாண்மை, கட்டடவாக்கம் மற்றும் சுயதொழில்களை உள்ளடக்கவில்லை. இவற்றில் புதிய கொள்கைகளின் தாக்கம் கணிசமானளவு உணரப்பட்டிருக்கும், இத்துறைகளுக்கான தரவுகள் குடிமதிப்பு ஆண்டுகளுக்கும் மாதிரி அளவைகள் நடத்தப்படும் ஆண்டுகளிற்கும் மாத்திரமே கிடைக்கக்கூடியன.

மத்திய வங்கியால் நடத்தப்பட்ட தொழில் நிலையின் ஆண்டு அளவீடு அரச திணைக்களங்களில் தொழில்நிலை 5389 அல்லது 1.1 சதவீத மதிப்பிடப்பட்ட அதிகரிப்பைக் காட்டியது. அரசு சார்ந்த நிறுவனங்களில் தொழில் நிலை 1981 இல் 9,077 அல்லது 1.2 சதவீதத்தால் அதிகரித்தது. ஊழியர் சேமநிதியத்திடமிருந்து தனியார் துறையிலுள்ள மாதிரி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்ட தற்காலிகத் தரவுகள் நன்கமைந்த தனியார் துறையில் குறிப்பிட்டதொரு அதிகரிப்பு 26,156 அல்லது 2 சதவீதத்தை 1980 இன் 3,030 கொண்ட அதிகரிப்பிற்கு எதிராக காட்டுகின்றது.

பொருளாதாரம் அமைப்பு மாற்றங்களுக்கு உட்படும் காலப்பகுதியில் தொழில் நிலை மட்டத்தின் அளவீடுகளாக மரபுவழி குறிகாட்டிகள் இருப்பது போதாமையை அதிகரித்தளவில் காட்டுகின்றது. நன்கமைந்த துறையின் தாக்கத்தை உண்டாக்கும் தொழில்நிலை, (அரசுஉட்பட) கடந்த ஆண்டு அரச செலவினங்களில் ஏற்படுத்தப்பட்ட நிதியீட்டு எல்லைகள் வங்கிக் கொடுகடன் விரிவாக்கத்தை குறைப்பதற்கு எடுத்த முயற்சி புதிய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமை என்பனவற்றால் பாதிப்படைந்தது. பல அரச கூட்டுத்தாபனங்கள் மாறும் சூழலுக்கு ஏற்ப கொள்கை, மறுசீராக்கத்தின் ஒரு பகுதியாகவும் செயலாற்றல் திறனை அதிகரிக்கவும் பல ஆள் குறைப்புத் திட்டங்களினால் அலுவலர்களை குறைத்துள்ளன. இதற்கு மாறாக தனியார் துறையில் வேலை வாய்ப்புக்கள் மிகவும் அதிகரித்தன. நன்கமையாத துறைகளில் தொழில்நிலை அபிவிருத்தியின் மீதான புள்ளிவிபரங்கள் கிடைக்கக்கூடியனவாகவில்லை. மேலும் நன்கமையாத துறை தனித்து, 1981 இல் உண்மை கூலிகளில் அதிகரிப்பை நன்கமைந்த துறையின் தொழில் பெறுநர் பிரிவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக காட்டுவதுடன் இத்துறையில் கிடைக்கக்கூடிய தொழில் வழங்கல்களுக்கு இருந்திருக்கும் மிக அதிகளவு கேள்வியையும் காட்டுகின்றது. வேலை தேடும் நிலையில் இருக்கும் 125,000 பேருக்கும் ஒரு ஆண்டு சம்பள உயர்வை வழங்கும் பட்சத்தில் வேலை உருவாக்கத்திற்கான ஆற்றலானது நன்கமைந்த அமைவாக தனியார் துறைகளில் இதற்கு முன்பிருந்ததைவிட அதிகமாக இருப்பதை அண்மைக்கால அபிவிருத்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

**விலைகள்**

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிக்கப்பட்டவாறு பொதுவான விலை மட்டத்தில் அதிகரிப்பு வீதமானது 1981 இல் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. 1980 இன் 26சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சுட்டெண் 1981 இல் 18 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. புள்ளிக்குப்புள்ளி அடிப்படையிலும்

கூட சுட்டெண்ணனது 1981 திசெம்பரில் கடந்த ஆண்டு இதே அளவு அதிகரிப்பைக் காட்டியது. இந்த விளையுயர்வுகளிலுள்ள வேகக் குறைவு குறைந்த விரிவாக்க இறைக்கொள்கை கட்டுப்பாடான நாணயக் கொள்கை, இறக்குமதி விலைகளின் குறைந்த அதிகரிப்பு வீதம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த விளைவாகும்.

சுட்டெண்ணின் பண்டவகைப்பகுப்பானது 1981 ஆம் ஆண்டின் அதிகரிப்பின் 60 சதவீதமானது உள்நாட்டுப் பண்டங்களின் உயர்ந்த விலையாலும் முறையே 35, 5 சதவீதம் இறக்குமதிப் பண்டங்களின் உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதிப் பண்டங்கள் என்பனவற்றின் விலை அதிகரிப்பாலும்மெனக் காட்டியது. சுட்டெண்ணின் மேலுமொரு பகுப்பாய்வு அரிசி, கோதுமைமா, பாண் என்பனவற்றின் விலைகளின் மேல்நோக்கிய திருத்தம் சுட்டெண்ணில் 49 சதவீதத்தை கொண்டதென வெளிப்படுத்தியது. மிகுதி 51 சதவீதம் ஏனைய விடயங்களின் விலையதிகரிப்பின் தாக்கத்தின் பிரதிபலிப்பாகும்.

மத்திய வங்கியின் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணும் 1981 இல் விலை அதிகரிப்பில் குறைந்த வீத வளர்ச்சியையே பிரதிபலித்தது. சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி 1980 இன் அதிகரிப்பான 34 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 1981 இல் 17 சதவீதத்தால் அதிகரித்தது. இந்த மொத்த விற்பனைவிலைச்சுட்டெண்ணின் அதிகரிப்புக்களில் 64 சதவீதம் உள்நாட்டு தொகுதியில் உள்ள விடயங்களின் விலையதிகரிப்பாக இருக்கையில் 36 சதவீதம் இறக்குமதித் தொகுதியின் விலை அதிகரிப்பாக இருந்தது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதி பண்டங்களின் விலைகள் 1981 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை விலைச்சுட்டென் அதிகரிப்பில் அதிகளவு தோற்றப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

முடிவுப்பயன்பாட்டு அடிப்படையிலான பண்டங்களின் ஒரு பகுப்பாய்வு அதிகரிப்பில் நுகர்வுப் பொருட்களின் உயர்ந்த விலைகள் 66 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் இடையிலைப் பொருட்கள் முதலீட்டுப் பொருட்கள் முறையே 32 சதவீத, 2 சதவீதங்களிற்கு வகைகூறியமையை எடுத்துக்காட்டுகின்றது.

மொத்தத்தில் 1980 ஆம் ஆண்டுக்காலத்தில் விலைமட்டங்களில் ஏற்பட்ட தீர்க்கமான அதிகரிப்பிற்கு ஓராண்டுக்குப்பின்னர் மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் பின்பற்றப்பட்ட நன்கமைந்த கேள்வி முகாமைக் கொள்கைகள், விலைமட்டத்தில் தாக்கத்தினை தணிப்பதற்கான நம்பகமான அறிகுறிகளைக்காட்டின.

**கூலிகள்**

1981 ஆம் ஆண்டு, அரசின் கூலிக் கொள்கைகளில் குறிப்பாக அரசதுறை ஊழியர்களைப் பொறுத்தவரையில் முக்கிய மாற்றங்களைக் காணக்கூடியதாகவிருந்தது. சம்பள மீளாய்வுக்குழுவின் சிபாரிசின் பேரில் அரசாங்கத்தினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அடிப்படைச் சம்பளத்தினதும் சகாயப்படிகளினதும் ஒன்று சேர்ப்பு, ஊழியர்களின் பிரிவு அல்லது தரங்களின் எண்ணிக்கை நன்கு முகாமைப்படுத்தக்கூடிய அளவிற்கு குறைத்தல்போன்ற 1982 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்ட சுட்டெண் அடிப்படையில் எல்லா அரசதுறை ஊழியர்களினதும் கூலிகளை கணிப்பது 1981 நவெம்பரில் நடைமுறைக்கு வந்தது. அரச ஊழியர்களின் கூலிகள் உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்திருந்த வேளையிலும் 1980 இல் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது ஆண்டு இறுதியில் நடைமுறைக்கு வந்த சுட்டெண் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட இவ்வீழ்ச்சி யைக் கட்டுப்படுத்த உதவியது நன்கமைந்த தனியார் துறைகளில் கூட உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்தன எனினும் நெல், கட்டடவாக்கம் போன்ற நன்கமையாத துறைகளில் கூலிகள் உண்மை நியதிகளில் அதிகரித்தன.